


சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர், அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.



தென்காசி மாவட்டம் ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வெற்றி வேட்பாளர் பி.ஹெச்.பி. மனோஜ் பாண்டியனை ஆதரித்து ஆலங்குளம் அண்ணா நகர் பகுதியில் நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறியும் 2026 தேர்தல் அறிக்கையை பற்றியும் வாக்காளர்களிடம் ஒன்று விடாமல் எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். நிகழ்வில் தொகுதி பார்வையாளர் கணேஷ்குமார் ஆதித்தன், நகர செயலாளர் நெல்சன், மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் ஆலடி எழில்வாணன், வார்டு செயலாளர் அல்போன்ஸ் உள்பட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.



## தி.மு.க. இளைஞர் அணி

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பரப்புரை சுற்றுப்பயண அறிவிப்பு

2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணிச் செயலாளரும் மாண்புமிகு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பரப்புரை மேற்கொண்டு வருகிறார். நான்கு கட்ட பரப்புரை முடிந்த நிலையில் ஐந்தாம் கட்ட பரப்புரையை கன்னியாகுமரியில் 14–04–2026 அன்று தொடங்கினார். அதன் விவரம் வருமாறு:

**15.4.2026 புதன்கிழமை**

| நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|
| காலை 9.30 மணி | ஒட்டப்பிடாரம் | தேரடி சந்திப்பு, ஒட்டப்பிடாரம். |
| காலை 11.00 மணி | கோவில்பட்டி | மஹாராஜா டீ ஸ்டால் பிரதான சாலை, கயத்தாறு. |
| மாலை 4.00 மணி | வாசுதேவநல்லூர் | காமராஜர் சிலை முன்பு, புளியங்குடி. |
| மாலை 5.30 மணி | ஸ்ரீவில்லிபுத்தூர் | ஆண்டாள் கோயில் தேரடி வீதி, ஸ்ரீவில்லிபுத்தூர் |
| மாலை 6.30 மணி | சாத்தூர் | ஆலங்குளம் TBC முக்கு சாலை, சாத்தூர். |
| இரவு 8.00 மணி | விருதுநகர் | எம்.ஜி.ஆர் சிலை முன்பு, விருதுநகர். |
| இரவு 9.00 மணி | திருமங்கலம் | தேவர் சிலை அருகில், திருமங்கலம். |

**16.4.2026 வியாழக்கிழமை**

| நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|
| காலை 9.30 மணி | ஆண்டிப்பட்டி | பேருந்து நிலையம் அருகில், ஆண்டிப்பட்டி. |
| காலை 11.00 மணி | பெரியகுளம் | புதிய பேருந்து நிலையம் பிரிவு, உட்லண்ட்ஸ் ஹோட்டல் அருகில், பெரியகுளம். |
| மாலை 3.30 மணி | வேடசந்தூர் | ஆத்துமேடு, வேடசந்தூர் |
| மாலை 4.30 மணி | திண்டுக்கல் | நாகல் நகர், திண்டுக்கல். |
| மாலை 5.30 மணி | சோழவந்தான் | பேருந்து நிலையம் அருகில், அலங்காநல்லூர். |
| இரவு 7.00 மணி | மதுரை வடக்கு | புதூர் பேருந்து நிலையம் அருகில், மதுரை. |
| இரவு 8.00 மணி | மதுரை கிழக்கு | வண்டியூர், சௌராஷ்டிராபுரம், மதுரை. |

அன்பகம்
தேனாம்பேட்டை,
சென்னை – 18
நாள் : 13.4.2026



# திருக்கோட்டியூரில் எஸ்.எஸ்.தென்னரசு 35 வது ஆண்டு நினைவு தினம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் தி.மு.க.வினர் மலரஞ்சலி!

*சிவகங்கை, ஏப். 15-*

சிவகங்கை மாவட்டம் திருக்கோஷ்டியூரைச் சேர்ந்தவர் எஸ். எஸ். தென்னரசு. இவர் தென் மண்டல கழகத்தின் வளர்ச்சிக்கு அயராது பணியாற்றிய கழக முன்னோடி ஆவார். கழக தென்மண்டல அமைப்பு செயலாளராகவும், திருப்பத்தூர்தொகுதி சட்டமன்ற உறுப்பினர், ஒன்றுபட்ட ராமநாதபுரம் மாவட்டக் கழக செயலாளர், கழகத் தலைவர் கலைஞரால் சின்னமருது என்று அழைக்கப் பட்டவர். கழகத்தின்மூத்த முன்னோடியான தென்னரசு 1991 ஆம் ஆண்டு ஏப்ரல் 13ம்தேதி மறைவெய்தினார். ஆண்டுதோறும் அவரது நினைவிடத்தில் சிவகங்கை மாவட்ட தி.மு.க. மற்றும் தென்னரசு குடும்பத்தினர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். இந்த ஆண்டு 35வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு காலை 9 மணி அளவில் தானிப்பட்டியில் உள்ள அவரது நினைவிடத்தில் கூட்டுறவுத் துறை அமைச்சர் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.



இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாநில கழக செய்தி தொடர்பு துணைத் தலைவர் மருதுஅழகுராஜ் மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கைமாறன், முன்னாள் எம்.எல்.ஏ. சுப. மதியரசன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.அருணாச்சலம், தென்னரசு மகன் இளவரசி, மருமகன் நமக்கோடி நாராயணன், மாவட்ட சுற்றுச் சூழல் அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ.வல்லபாய் மற்றும் தென்னரசு குடும்பத்தினர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். தொடர்ந்து ஒன்றிய செயலாளர்கள் எஸ்.சண்முகவடீவேல், காரைக்குடி மாநகர செயலாளர் துணை மேயர் நா.குணசேகரன், புலவர் செவந்தியப்பன், பொதுக் குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கே.எம். பொற்கோ, பேரு ராஞ்சி மன்ற தலைவர் திருமதி கோகிலா ராணி நாராயணன் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ். நாராயணன் மானாமதுரை நகர் கழக செயலாளர் க. பொன்னுச்சாமி, மும்பை ஜேசுராஜ் , ஒன்றிய துணை செயலாளர் எஸ்.முத்துகுமார் கார்த்தி, மாணிக்கம், வசந்த், பாண்டி உட்பட மாவட்டம் முழுவதிலுமிருந்து ஏராளமான தி.மு.கவினர் அஞ்சலி செலுத்தினார்கள். தொடர்ந்து திருக்கோட்டியூ ரில் தென்னரசு இல்லத்தில் அவரது படத்திற்கு அமைச்சர் கே. ஆர்.பெரியகருப்பன் தலைமையில் கழகத்தினர் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

## நாமக்கல்லில் நாமக்கல் இராணி வாக்கு சேகரிப்பு!

*நாமக்கல், ஏப். 15-*

நாமக்கல் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் திமுக வெற்றி வேட்பாளராக போட்டியிடும் நாமக்கல் ப.இராணி, மோகனூர் ஒன்றியத்திற்குட்பட்ட குமரிபாளையம் ஊராட்சி மாமரத்துபட்டி பகுதியில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

பிரசாரத்தின் போது பொதுமக்களை நேரில் சந்தித்து, திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் திமுக தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆட்சியின் சாதனைகள் மற்றும் தேர்தல் வாக்குறுதிகள் குறித்து விளக்கி, ஆதரவு திரட்டினார். பெண்கள், இளைஞர்கள் மற்றும் மூத்த குடிமக்களிடம் தனிப்பட்ட முறையில் கலந்துரையாடி, அவர்களின் தேவைகள் மற்றும் கோரிக்கைகளையும் கேட்டறிந்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### த.க. பாலசுந்தரம்

**ஏப்ரல் 15 (2008)**



தி.மு.கழகம் துவங்கிய நாளிலிருந்தே உறுப்பினராக இருந்தவர்.

வாலாசா நகர துணைச் செயலாளராகவும் பின்னர் 26 ஆண்டுகள் தொடர்ந்து நகரச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

கழக பொதுக்குழு உறுப்பினராவும் இருந்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக 1962ல் நடைபெற்ற விலைவாசிப் போராட்டத்தில் பங்கேற்று, வேலூர் சிறையில் 70 நாட்கள் பேரறிஞர் அண்ணாவுடன் சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர் திருமங்கலம் தொகுதி மு.மணிமாறன் அவர்களுக்கு வல்லரசு பார்வர்ட் பிளாக் தலைவர், அம்மாவாசி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.